குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சாத்தூர்.
முன்னிலை: திரு. சா. வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.
2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ம் நாள் செவ்வாய் கிழமை
STC. No.804/2024

(BNSS பிரிவு 351(1)(ஆ)–ன் படியான விசாரணை)

எதிரி – ஹரிகிருஷ்ணா

| | | | |
|---|---|---|---|
| 1) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பரமசிவம் அவருடைய சாட்சியத்தில், எதிரியான நீங்கள் சாத்தூரில் கெங்கா லாரி சர்வீஸ் என்ற பெயரில் லாரி டிராஸ்போர்ட் தொழில் நடத்தி வருவதாகவும், அதன் மூலம் வாதிக்கு உங்களுக்கும் நல்ல பழக்கம் என்றும், அதன் அடிப்படையில் எதிரியாகிய நீங்கள் வாதியிடம் அடிக்கடி கைமாற்று கடனாக ரொக்கம் பெற்று திருப்பி செலுத்தியதாகவும், 06.07.2024 ம் தேதி எதிரியாகிய நீங்கள் வாதியை நேரில் சந்தித்து சரக்கு லாரி கொல்கத்தா மாநிலம் சிலிகுரியில் மாட்டியதால் Sales Tax Department க்கு அபராதம் கட்ட வேண்டும் என்று கூறி மேற்படி அவசர தேவைக்காக ரூ.6,35,000/– கேட்டதாகவும், அன்றைய தினமே மேற்படி ரூ.6,35,000/– த்தை கடனாக பெற்றுக்கொண்டு சாத்தூர் கிளை Axis Bank நிரப்பப்படாத வெற்றுகாசோலையை (காசோலை எண்.085492) வாதியிடம் கொடுத்து மேற்படி கடன் தொகையை 1 மாதங்களில் திருப்பி தந்துவிடுவதாக நீங்கள் கூறியதாகவும், சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | நான் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ரூபாய் 50,000/–த்தை மூன்று முறையாக, மொத்தம் ரூபாய் 1,50,000/–த்தை கடனாக பரமசிவத்திடமிருந்து வாங்கினேன். அதற்காக என்னுடைய ஒரு காசோலையை கையொப்பமிட்டுக் கொடுத்தேன். அந்தத் தொகையை திருப்பி செலுத்துவதற்காக நான் வாரம் ரூபாய் 15,000 வீதம் ரூபாய் 4,70,000 கொடுத்துள்ளேன். இந்தத் தொகையை நான் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை கொடுத்தேன். |
| 2) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பரமசிவம் அவருடைய சாட்சியத்தில், 06.08.2024 ம் தேதி வாதி மேற்படி தொகையை உங்கிளடம் கேட்டதாகவும், நீங்கள் கடன்தொகையை கொடுக்காமல் வீணாக காலம் கடத்தி வந்ததாகவும், 24.09.2024 ம் தேதி எதிரியாகிய நீங்கள் வாதியை நேரில் சந்தித்து உங்களது கணக்கில் பணம் உள்ளது என்று கூறி ஏற்கனவே Security ஆக கொடுத்த தங்களுடைய வங்கி கணக்குள்ள சாத்தூர் கிளை Axis Bank காசோலையை (காசோலை எண்.085492), 24.09.2024 ம் தேதியிட்டு ரூ.6,35,000/–க்கு கையெழுத்திட்டு நிறைவேற்றி கொடுத்து, வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு கூறியதாவும், |

| | | | |
|---|---|---|---|
| | | | சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | நான் என்னுடைய வங்கி கணக்கில் உள்ள காசோலையை கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன். அதில் எதுவும் நிரப்பப்படவில்லை. |
| 3) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பரமசிவம் மேலும் அவருடைய சாட்சியத்தில், தங்களுடைய காசோலையை வாதி அவர் கணக்கு வைத்துள்ள சாத்தூர் கிளை பெடரல் வங்கியில் கணக்கில் வசூலுக்காக 25.09.2024 ம் செலுத்திய போது, அது 26.09.2024 ம் தேதி "போதிய பணமில்லை" என ரிட்டன் மெமோ கொடுக்கப்பட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | உண்மை |
| 4) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பரமசிவம் மேலும் அவருடைய சாட்சியத்தில், 28.09.2024 ம் தேதி எதிரியாகிய உங்களுக்கு மேற்படி காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பை 01.10.2024 ம் தேதி பெற்றுக்கொண்டு 28.10.2024 ம் தேதி பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | எனக்கு அறிவிப்பு வந்தது அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பி விட்டேன் |
| 5) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பரமசிவம் மேலும் அவருடைய சாட்சியத்தில், மேற்படி காசோலை திருப்பப்பட்ட விவரம் தெரிந்தும் இதுநாள் வரை பணம் எதுவும் தரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | நான் வாரம் பதினைந்தாயிரம் வீதம் 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பணம் கொடுத்துள்ளேன். |
| 6) | கேள்வி | : | வா.சா.1 – வாதி பரமசிவம் மேலும் அவருடைய சாட்சியத்தில், தங்களுடைய வங்கி கணக்கில் பணம் இல்லாதது தெரிந்தும், மேற்படி காசோலையை கொடுத்து வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடன் செயல்பட்டதாகவும் கூறி, நீங்கள் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான குற்றச்செயலை செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளாரே? நீர் என்ன சொல்கிறீர்? |
| | பதில் | : | பொய் வழக்கு |
| 7) | கேள்வி | : | இவ்வழக்கு குறித்து நீர் வேறு ஏதேனும் கூற வேண்டுமா? |
| | பதில் | : | நான் பரமசிவத்திற்கு என்னுடைய GPay மூலம் பணம் அனுப்பியதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். நான் அவர் மீதும், |

| | | | |
|---|---|---|---|
| | | | அவருடைய அப்பா மீதும் சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் கந்துவட்டி தொடர்பாக புகார் கொடுத்துள்ளேன். அதன் விசாரணை அறிக்கையை தாக்கல் செய்கிறேன். அதற்கு பரமசிவத்தின் அப்பா என் மீது பொய்யாக புகார் கொடுத்து இருக்கன்குடி காவல் நிலையத்தில் குற்ற எண் 131/2024 வழக்கு கொடுத்துள்ளார். அதற்கான முதல் தகவல் அறிக்கை நகலை தாக்கல் செய்கிறேன். அவர் என் மீது உரிமையில் வழக்கும் தாக்கல் செய்துள்ளார். |
| 8) | கேள்வி | : | வழக்கை சமரசமாக முடித்துக் கொள்ள விரும்புகிறீர்களா? |
| | பதில் | : | நான் வாங்கிய தொகைக்கு மேல் பணத்தை கொடுத்துவிட்டதால் சமரசமாக முடிக்க முடியாது |
| 9) | கேள்வி | : | உமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? |
| | பதில் | : | உண்டு |

மேற்படி கேள்விகள் என்னால் நேரடியாக எதிரியிடம் கேட்கப்பட்டு, அவர் கூறிய பதில்கள் என்னால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்.